# Gospel Truth

# காஸ்பல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 14 – International Editor : Michael W.Smith – இதழ் - 14


## யோவான்ஸ்நானகனின் தைரியம்

(மாற்கு 6 : 17-28 வசனங்களை எடுத்துக் காட்டி விவரிக்கப்பட்டுள்ளது).

ஏரோது தன் ஜென்ம நாளிலே தன்னுடைய பிரபுக்களுக்கும், சேனாதிபதிகளுக்கும், கலிலேயா நாட்டின் பிரதான மனுஷருக்கும் ஒரு விருந்து பண்ணினபோது, ஏரோதியாளின் குமாரத்தி சலோமி சபை நடுவே வந்து நடனம் பண்ணி, ஏரோதுவையும், அவனோடே கூடப் பந்தியிருந்தவர்களையும் சந்தோஷப்படுத்தினாள். அப்பொழுது ராஜா சிறுபெண்ணை நோக்கி, உனக்கு வேண்டியதை என்னிடத்தில் கேள் அதை உனக்கு தருவேன் என்று சொன்னதுமல்லாமல், நீ என்னிடத்தில் எதைக் கேட்டாலும், அது என் ராஜ்யத்தில் பாதியானாலும், அதை உனக்குத் தருவேன் என்று அவளுக்கு ஆணையும் இட்டான்.

அப்பொழுது அவள் வெளியே போய், நான் என்ன கேட்க வேண்டும் என்று தன் தாயினிடத்தில் கேட்டாள்.அவள் தாய் ஏரோதியாள், ஏரோதுவின் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவியாவாள்.

இந்த ஏரோது ராஜா, தன் சகோதரனை காண வரும்போது, அவன் மனைவி ஏரோதியாளைக்



**சகோதரனின் மனைவியை வைத்திருப்பது நியாயமல்ல**

கண்டு அவள்மீது ஆசை வைத்தான். யோவான்ஸ்நானகன் ஏரோதை நோக்கி: நீர் உம்முடைய சகோதரன் மனைவியை வைத்துக் கொள்வது நியாயமல்லவென்று சொன்னதினிமித்தம் அவனை காவலில் வைத்திருந்தார்கள்.

ஆகவே ஏரோது ராஜாவும், ஏரோதியாளும் தன்தன் மனைவியையும், புருஷனையும் தள்ளிவிட்டு, ஆஸ்திக்காகவும் இவர்கள் இருவரும் சதிசெய்து, ஏரோது அவளை மனைவியாக்கி கொண்டான்.

ஏரோதியாளும் அவனுக்கு சதி நினைத்து அவனைக் கொன்று போட மனதாயிருந்தாள். ஆகிலும் அவளால் கூடாமற்போயிற்று. யோவான் ஸ்நானகன் நீதியும், பரிசுத்தமுமுள்ளவனென்று அறிந்து ஏரோதும் அவனுக்குப் பயந்து, அவன் சொல்லைக் கேட்டு வந்தான்.இதையெல்லாம் மனதில் கொண்டு, சமயம் வாய்த்த போது தன் மகள் சலோமியிடம் யோவான் ஸ்நானகனின் தலையை கேள் என்றாள்.

அதைக் கேட்டபோது ராஜா மிகுந்த துக்கமடைந்தான். ஆகிலும் ஆணையினிமித்தமும் அதை மறுக்க மனதில்லாமல் யோவான் ஸ்நானகனுடைய தலையை ஒரு தாலத்திலே கொண்டுவந்து அந்த பெண்ணுக்குக் கொடுத்தாள். அவள் அதைத் தன் தாயினிடத்தில் கொடுத்தான்.


| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் பக்கம் - 3<br>வேதாகம வழிகாட்டி பக்கம் - 4 | விவாகரத்தும் மறுமணமும் பக்கம் 5 - 8 | பலதாரமணம் ஏற்றுக்கொள்ளப்படாது பக்கம் 9 | கேள்விக்கென்ன பதில் குழந்தைகளைக்குறித்து பக்கம் - 10-11 | உங்களுக்குத் தெரியுமா? ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை பக்கம் - 12 |

# வேதாகமம்



## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**
2தீமோ 3:16-17; 2பேது 1:20-21;
மத் 24:35

**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23,
1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**
அப் 3:19; 17:30; 2கொரி 7:10

**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4,
எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**
லூக் 1:73-75; எபி 12:14; 1பேது 1:15-16;
தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6;
1கொரி 12 :12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3:28;
வெளி 18:2-4

**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30;
1கொரி 11 :23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3;
1கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**
1தீமோ 2:9-10; 1கொரி 11 :14-15;
உபா 22 :5

**கடைசிகாலம்**
2பேது 3 : 7-12 ; யோவா 5 :28, 29
2கொரி 5 :10; மத் 25 :31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4: 23, 24; எபே 5 :19;
2கொரி 3 :17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16:15

இயேசுவுக்கு முன்பே வாழ்ந்த யோவான் ஸ்நானகன் தைரியமாய் தேவனுடைய சத்தியத்தை அறிவித்ததினிமித்தம் தன் வாழ்வை இழந்தார். பல மதபோதகர்களும் சொல்ல தயங்கியபோதும், இந்த யோவான் ஸ்நானகன் கர்த்தருக்குக் கீழ்படிந்து தைரியமாய் துணிந்து செயல்பட்டார்.

யூத வரலாற்றாளர் ஜோசபஸ் கூறுகையில் : யூதநாட்டின் நியாயப்பிரமாணத்தையே திகைக்க வைக்கும் விதமாய், புருஷன் உயிரோடிருக்கையிலே, சகோதரனுடைய மனைவியாகிய ஏரோதியாளை இந்த ஏரோதுராஜா தனக்கு மனைவியாக்கிக் கொண்டான் என்றார் (பண்டைகாலம் 18.136.5).

ஏரோதுவும், ஏரோதியாளும் மோசேயின் நியாயப்பிரமாணத்தை பல இடங்களில் மீறுகிறவர்களாய் காணப்பட்டார்கள். இன்று பலவகையான பாவங்களால் ஜனங்கள் தங்களை கெடுத்து கொள்ளாதபடிக்கு தேவன் அவருடைய ஊழியர்களை கொண்டு எச்சரிக்கிறார். உலகம் இன்று பல கேடுகளுக்குள்ளும், பாவ இருளுக்குள்ளும் அடைபட்டுக் கிடக்கிறது. கர்த்தருடைய பூரண கிருபையினாலும், இரக்கத்தினாலும் பாவமன்னிப்பாகிய மீட்பை அவர் நமக்கு அருளியிருக்கிறார். அவர் இம்மனுக்குலத்திற்கு கட்டளையிடுவது யாதெனில் ஒருவன் ஒரு மனைவியை உடையவனாய் சத்தியத்திற்கு கட்டுபட்டு வாழவேண்டும்.

கர்த்தர் நமக்கு அருளிய பரிசுத்த விவாக வாழ்க்கை ஆச்சரியமானது. ஆனால் இன்று உலகின் பல மாற்றம் செய்யப்பட்ட சட்டதிட்டங்கள் கர்த்தருடைய கட்டளையினின்று நம்மை விலகச் செய்யும் விதமாய் அமைந்துள்ளது. விவாகரத்தும் மறுமணமும் புதியஏற்பாட்டு பிரமாணப்படி கர்த்தருடைய கட்டளையை மீறுவதே ஆகும்.

பல கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய கட்டளையை மீறி செய்யும் திருமணங்கள் பல சபைகளால் கண்டிக்கப்படுவதில்லை. சத்தியத்தை அதிதீவிரமாய் அவமதிக்கிற இவர்கள் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். குற்றமனப்பான்மையில் பயமின்றி தன்னைத்தானே சமரசம் செய்துகொண்டு வாழ்கிறார்கள்.

இக்காலத்திற்கான யோவான் ஸ்நானகன் எங்கே?

## காஸ்பல் ட்ரூத்

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.*

*கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும். அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது. பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது. சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.*

## இணையதள சேவை

*எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** என்ற *இணையதள முகவரியை பார்க்கவும். மேலும் உங்களது* **E.mail** *மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம். உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

## தொடர்புக்கு

*தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.*

**ஆசிரியர். டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி
பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# ஆசிரியரின் தலையங்கம்

தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் – மல்கியா 2 : 16

இஸ்ரவேலை போஷித்து, பாதுகாக்கும் தேவனுக்கு விரோதமாய் தங்கள் கழுத்தை திருப்பி, அந்நிய தேவர்களை சேவித்து ஆவிக்குரிய விபச்சாரிகளாகிவிட்ட இவர்களைக் குறித்து தேவன் துக்கப்படுகிறார்.தேவன் மனுக்குலத்தை படைத்ததன் நோக்கம் அவர்களெல்லாரும் ஒருமனதாய் ஒற்றுமையாய் வாழ, ஆனால் பாவம் செய்ய அறிந்த மனிதன், தேவனுக்கும் மனுஷனுக்கும் பிரிவினை உண்டாக்கி, அவரை வேதனைப்படுத்துகிறான்.விவாகரத்து என்கிற ஒரு செயலின் மூலம் தள்ளிவிடுதல் என்பது கர்த்தர் வெறுக்கிற காரியம்.

ஆகவே இந்த இதழில் விவாகரத்தும், மறுமணமும் என்கிற தலைப்பில் உங்களோடு பேச விரும்புகிறேன்.இதைக்குறித்து முழுவதுமாய் சொல்ல முடியாவிட்டாலுங்கூட இங்கே சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு காரியங்களும் உங்கள் மனதில் புரிதலை உண்டாக்கும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

இன்று விவாகரத்தும், மறுமணமும் மற்ற ஜனங்களிடையே மாத்திரமல்ல, பொதுவாக கிறிஸ்தவர்களிடையே அதிகமாக காணப்படுகிற காரியமாயிருக்கிறது.இயேசு தெளிவாக கூறியிருக்கிறார். விவாகரத்தும், மறுமணமும் அவருடைய சித்தமல்ல. ஜனங்கள் வசனத்தின் அர்த்தத்தை மாற்றி, தங்களுக்கு சாதகமாக்கி உயிரோடு இருக்கும் வாழ்க்கைத் துணையாகிய மனைவியையோ அல்லது கணவனையோ விவாகரத்து செய்ய எத்தனிக்கிறார்கள்.ஒரு தேவசபையின் ஐக்கியத்திலுள்ள ஒரு தேவஊழியர் எனக்கு தெரியும். அவர் தன் மனைவியை தள்ளிவிட்டு தேவன் என்னை தனியே வாழ அனுமதிக்கவில்லை என்று சொல்லி மறுதிருமணத்திற்கு ஆயத்தமாகிறார். பரிசுத்தஆவியானவர் ஒருபோதும் யாரையும் சத்தியத்துக்கு மாறாக வழிநடத்தி செல்லமாட்டார்.

விவாகரத்தும் மறுமணமும் குடும்பத்தை அழிக்கும் ஆவிகள். பெற்றோர்களின் சுயத்துக்கும், பாவத்துக்கும் பிள்ளைகள் பரிதவிக்கப்பட்டவர்களாகிறார்கள். பிள்ளைகள் தன் தகப்பனோடும், தாயோடும் குடும்பமாய் ஒன்றாக சேர்ந்து வாழவே அவர் விரும்புகிறார். திருமண வாழ்க்கையில் வரும் பிரச்சனைகளுக்கு மறுமணம் என்பது ஒருபோதும் தீர்வாகாது.தேவனுடைய அன்பையும், இரக்கத்தையும், மன்னிப்பையும் பெற்று கர்த்தர் கொடுத்த நம் வாழ்வை இன்பமாக்கலாம்.


சிலபேரது வாழ்வு இந்த விவாகரத்து மற்றும் மறுமணத்திற்குள்ளாக கடந்து சென்றிருக்கலாம். மிக முக்கியமானது யாதெனில் இவை நம்மை தாக்காதவாறு தேவ ஆலோசனையை ஏற்று நடக்க வேண்டும். அமைதியாய் விட்டுகொடுத்து வாழ்ந்தால் என்றும் குடும்பத்திற்குள் சமாதானம் நிலவும்.

ஒவ்வொரு பெற்றோரும், ஞாயிறு பாடசாலை ஆசிரியரும், தேவஊழியரும் இந்த சத்தியத்தைக் குறித்து சிறுபிள்ளைகளுக்கும், வாலிபர்களுக்கும் தவறாமல் போதிக்கும்படி உங்களை வற்புறுத்துகிறேன்.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*



மகிழ்ச்சியான திருமண வாழ்க்கைக்கான வழிகள்

அன்பு

கவனம்

ஈகை

மரியாதை

மன்னிப்பு

சகிப்புத்தன்மை

தியாகம்

ஜெபம்

உற்சாகமூட்டுதல்

விசுவாசம்

கீழ்படிதல்

ஆதரவு செய்தல்

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : விவாகரத்தும் மறுமணமும்

**வேத வாசிப்பு:** தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணுகிறவன் விபசாரஞ்செய்கிறான்.புருஷனாலே தள்ளப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறான். – லூக்கா 16 : 18

**விளக்கம்:**திருமணம் என்பது வாழ்க்கை முழுவதும் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமான பந்தம்.இந்த பந்தமானது விபச்சாரம், விவாகரத்து, மறு மணம் ஆகிய காரணங்களால் அசுத்தப்படுகிறது.ஆகவே கர்த்தர் தந்த இப் புனிதமான திருமண வாழ்வை உதாசினப்படுத்த கூடாது.வாழ்க்கைத்துணை உயிரோடு இருக்கும்போது மறுமணம் செய்வது விபச்சாரம்

**I.ஆரம்பத்தில்**

A. ஆதி 2 : 18 கர்த்தர் ஆதாமுக்கு ஏற்ற துணையை உண்டாக்கினார்.

B. ஆதி 2 : 23 – 25 அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

**II.ஓரினச்சேர்க்கை தடைசெய்யப்பட்டது**

A. லேவி 20 : 13 அருவருப்பானது

B. ரோமர் 1 : 26 – 32 சுபாவ அநுபோகம்

C. 1 கொரி 6 : 9 இவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை

**III.உண்மையான நீதியும், நியாயமும்**

A. யாத் 20 : 14 விபச்சாரம் செய்யாதிருப்பாயாக

B. உபாகமம் 22 : 22 – 29 விபச்சாரம் செய்கிறவர்கள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்

C. உபாகமம் 24 : 1 – 4 மோசே விவாகரத்தை அனுமதித்தார்

D. மாற்கு 10 : 2 – 5 இருதயக்கடினத் தினிமித்தம்

**IV.கிறிஸ்துவின் நியாயப்பிரமாணம்**

A. மாற் 10 : 2–12

1. வசனம் 6–7 திருமணம் என்பது ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கு மான பந்தம்.ஆகவே தள்ளுதற்சீட்டு என்பது தகுந்த காரியமல்ல
2. வசனம் 8–9 திருமணம் என்கிற பந்தம் உடைந்து போகக்கூடாது.
3. வசனம் 10–12 விவாகரத்தும் மறு மணமும் விபச்சாரமே

B. லூக் 16 : 18 தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணுகிறவன் விபசாரஞ் செய்கிறான்.

C.மத் 5 : 31–32 வேசித்தன முகாந்தரத்தினாலொழிய

**V.மறுமணம் செய்ய நிபந்தனைகள்**

A.ரோமர் 7 : 1–3 புருஷன் மரித்த பின்பு அவள் அந்தப் பிரமாணத் தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல

B.1கொரி 7 : 10–11

C.1கொரி 7 : 39 கர்த்தருக்குட்பட்டவ னாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள்.

**VI.விபச்சாரத்துக்கு எதிரான நியாயத்தீர்ப்பு**

A.எபிரெயர் 13 : 4 தேவன் நியாயந் தீர்ப்பார்

B.கலா 5 : 19–21 மாம்சத்தின் கிரியைகள்

C.1 கொரி 6 : 9 இவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை

D.வெளி 21 : 8 அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்

E.யோவான் 8 : 3–11 நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே

**முடிவு :**

விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக: வேசிக்கள்ளரையும் விபச்சாரக் காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்
- எபி 13 : 4

# விவாகரத்தும் & மறுமணமும்

தேவன் மனிதனை உண்டாக்கினார். மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார் (ஆதி 2 : 18) இதிலிருந்தே தேவன் விவாகத்தை உண்டாக்கி விட்டார், "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதி 2 : 24).

தேவனுக்கும், மனிதனுக்கும் உள்ள உறவுக்கு அடுத்தபடியாக, இந்த உலகிலே கணவன் மனைவியின் உறவு மதிக்கப்படுகிறது. விவாகம் என்பது உலகத்தை உண்டாக்கின கர்த்தராலே உருவாக்கப்பட்டது. ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் நடைபெறும் விவாகத்தின் மூலம் அவர்கள் வாழ்நாள் முழுவதும் அந்த பந்தம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

பிசாசானவன் இந்த விவாகபந்தத்தை அழிக்கும்படியாய் குடும்பங்களோடு போராடுகிறான். இந்த உலகம் அசுத்தப்பட்டு சமரசம் செய்து, விவாகத்தின் அர்த்தத்தையே மாற்றுவதற்கு ஒருவருக்கும் அதிகாரமில்லை.

**விவாகம் - ஒரு ஆண் - ஒரு பெண்**

தேவசித்தத்தின்படி திருமணம் என்பது ஒரு ஆணுக்கும், பெண்ணுக்குமானது. ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணம் என்பது கர்த்தருக்கு அருவருப்பானது. இந்த காரியத்தை செய்கிறவர்கள் (லேவி 20 : 13, ரோமர் 1 : 26 - 32) தேவனுடைய ராஜ்ஜியத்திலே பிரவேசிக்க மாட்டார்கள் (1 கொரி 6 : 9).

**மோசேயின் நியாயப்பிரமாணம்**

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணின ஒருவன் அவளிடத்தில் கன்னிமையைக் காணவில்லை என்று தெரிந்தால் கல்லெறியக்கடவோம். ஆனால் தவறாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தால் அவன் தன் ஜீவனுள்ளளவும் அவளைத் தள்ளிவிடக்கூடாது (உபா 22 : 19) . நியமிக்கப்படாத கன்னியாஸ்திரீயாகிய ஒரு பெண்ணை ஒருவன் கண்டு, கையைப்பிடித்து அவளோடு சயனிக்கையில் அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவன் உயிரோடிருக்குமளவும் அவளைத் தள்ளிவிடக்கூடாது (உபா 22 : 29) .

**மோசேயின் நியாயப்பிரமாணமாவது : விபச்சாரம் செய்யாதிருப்பாயாக (யாத் 20 : 14)**

ஒருவருக்கு நியமிக்கப்பட்ட ஒரு ஆணோ (அ) பெண்ணோ வேறொருவரோடு வேசித்தனம் பண்ணினால் இருவரும் கல்லெறிந்து கொல்லக்கடவர்கள் (உபா 22 : 22-29). இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய். குற்றமற்ற ஆணோ, பெண்ணோ விவாகமுற்றபின் ஒருவர் இறந்துவிட்டால் உயிரோடிருக்கும் அந்த ஆண் (அ) பெண் விடுதலையாயிருக்கிறார்கள்.

**மோசேயின் காலத்தில் விவாகரத்து அனுமதிக்கப்பட்டது**

நாட்கள் செல்ல செல்ல, யூதரல்லாத அந்நிய ஜாதியார் வழியாக விவாகத்தின் ஐக்கியம் மெல்ல மெல்ல தகர்க்கப்பட்டு, ஜனங்கள் விபச்சார காரியங்களில் ஈடுபட்டு, அதற்கான தண்டனையான ஆக்கினையை அடைந்தார். ஆகவே விவாகரத்தும், மறுமணமும் வழக்கமான ஒன்றாகவே இருந்தது.



இந்த உலக சட்டப்படி,
இருதாரமணம் செய்கிறவர்கள் நம்
எஜமானரின் முன் குற்றவாளிகள்
-ஜஸ்டின் மார்டியர், 160

மோசே விவாகரத்துக்கும் ஒப்புதல் அளிப்பதை உபாகமம் 24 : 1, 2 வசனங்களில் காணலாம்; ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணிக்கொண்டபின்பு, இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டைஎழுதி, அவள் கையிலே கொடுத்து அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம். அவள் அவனுடைய வீட்டை விட்டுப் போனபின்பு வேறொருவனுக்கு மனைவியாகலாம்.

## யூத சட்டத்திற்கு மாறானது

விபச்சாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டவர்கள் மரணத்திற்கு பாத்திரவான்கள் என்று தேவனுடைய வார்த்தை தெளிவாக சொல்லுகிறது. ஆனால் நாட்கள் செல்ல ஜனங்களின் அசுத்தங்களைக் கண்டு, இந்த சட்ட திட்டங்களை தளர்த்தி விவாகரத்து (ஏ) தள்ளுதற்சீட்டை அறிமுகப்படுத்தினார். ஆகவே இயேசு கிறிஸ்துவின் நாட்களில் இதைக்குறித்த பல குழப்பங்கள் யூதர்களுக்குள் காணப்பட்டது, அசுத்தம் என்கிற இந்த வார்த்தையினாலே விவாகரத்து ஏற்படுத்தப்பட்டது. பல யூதர்கள் விவாகரத்தை முறையாக கடைபிடிப்பதில்லை. ஒரு கணவனோ (அ) மனைவியோ விபச்சாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் தான் விவாகரத்து என்பதும் நடைமுறையில் உள்ளது. சிலர் தனக்கு விருப்பமில்லாத மனைவி என்று சொல்லியும், சமையல் சரியில்லை என்று சொல்லியும், வீட்டை அசுத்தப்படுத்தி ஒழுங்கின்மையாக வைக்கிறாள் என்று சொல்லியும் கூட விவாகரத்து பெற்றுக்கொள்கிறார்கள்.

### இயேசுகிறிஸ்துவின் நியதி

அப்பொழுது பரிசேயர், அவரைச் சோதிக்க வேண்டுமென்று, அவரிடத்தில் வந்து; “புருஷனானவன் தன் மனைவியைத் தள்ளிவிடுவது நியாயமா” மாற்கு 10 : 2 என்று கேட்டார்கள். அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறித்தே அவ்வாறு கேட்டார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து அவர்களுக்கு சொன்ன பதில், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார். நாமும் இன்று அவ்வாறாகவே வாழ கடமைப்பட்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்து அவர்களிடம் மோசே உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறது என்ன என்று கேட்டார் அதற்கு அவர்கள் தள்ளுதற்சீட்டை எழுதிக் கொடுத்து தள்ளிவிடலாமென்று மோசே உத்தரவு கொடுத்திருக்கிறார் என்றார்கள்.

10 : 3-4, இயேசு கிறிஸ்து அவர்களுக்குப் பிரதியுத்தரமாக “உங்கள் இருதய கடினத்தினிமித்தம் இந்த கட்டளையை உங்களுக்கு எழுதிக் கொடுத்தான் (10 : 5)” “ஆகிலும், ஆதியிலே மனுஷரை தேவன் ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக் கக்கடவன் என்றார்” (10 : 6 -10) . மோசேயின் நியாயப்பிரமாண காலத்தில் விவாகரத்து என்பது தண்டனைக்குரியது. ஆனால் காலங்கள் செல்ல செல்ல ஜனங்களுடைய இருதயக் கடினத்தினிமித்தமும், பாவத்தினிமித்தமுமே சட்டம் தளர்த்தப்பட்டு இதினிமித்தம் இயேசு கிறிஸ்து போதித்தது யாதெனில் தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்; கர்த்தருக்கு முன்பாக எந்த ஒரு மதம் சார்ந்த திருமண சட்டங்களாயினும் இருவரையும் பிரிக்கலாகாது, அவர் மறுக்கிறார் ஆனால் மனிதனோ சட்டத்தின்படி வகை தேடி திரிகிறான்.

*“ சிலர் தனக்கு விருப்பமில்லாத மனைவி என்று சொல்லியும், சமையல் சரியில்லை என்று சொல்லியும், வீட்டை அசுத்தப்படுத்தி ஒழுங்கின்மையாக வைக்கிறாள் என்று சொல்லியும் கூட விவாகரத்து பெற்றுக்கொள்கிறார்கள்.“*
*[ யூதர்களின் பழக்கம் ]*

### விபச்சார கூட்டத்தார்

இன்று போலவே அன்றும் இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் அவரிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள் இயேசு கிறிஸ்து அவர்களுக்கு தெளிவாகப் பதிலளித்தார்.

"எவனாகிலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருவனை விவாகம் பண்ணினால் விபச்சாரஞ் செய்கிறவனாயிருப்பான் மனைவியும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு, வேறொருவனை விவாகம் பண்ணினால், விபசாரஞ் செய்கிறவளாயிருப்பாள் என்றார்" (மாற்கு 10 : 10 –12). "திருமணம்" எனும் பந்தத்தில் இணைக்கப்பட்ட ஆணோ (அ) பெண்ணோ ஒருவர் மற்றொருவரும் தள்ளிவிட்டால் விபச்சாரம் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

> " விவாகம் என்பது
>
> நம் வாழ்வு சார்ந்தது
>
> தேவனுடைய பார்வையிலும்
>
> அது எந்த மனிதனுடைய
>
> கிரியைகளையும்
>
> சார்ந்ததல்ல "

லூக் 16 : 18 ல் இயேசு கிறிஸ்து கூறுகிறார் "தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணுகிறவன் விபசாரஞ் செய்கிறான்" புருஷனாலே தள்ளப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறான். மறு விவாகம் பண்ணுகிறவன் மாத்திரமல்ல, அவனால் விவாகம் பண்ணப்பட போகிறவள் குற்றமற்ற வளாயிருப்பினும் கூட, இதினிமித்தம் அவளும் விபச்சாரியாகிறாள். இயேசு கிறிஸ்து தெளிவாக கூறுகிறார். விவாகரத்தான ஒருவரை திருமணம் செய்யும் எவரும் விபச்சாரி இயேசு கிறிஸ்து மறுமணத்தை அங்கிகரிப்பதில்லை. .திருமணம் என்பது வாழ்க்கை – ஆதியிலே கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட விவாகம் எனும் உடன்படிக்கை அது.

**விபச்சாரத்தினின்று விடுதலையாக :**

"தன் மனைவியைத் தள்ளி விடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்கும் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ் செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்" (மத் 5 : 31 – 32). யூதமார்க்கத்தின் விடுதலை பத்திரப்படி, விவாகரத்தானவன் மறுமணம் செய்யும்படியாய் விடுதலையாயிருக்கிறான். ஆகவேதான் இயேசு கிறிஸ்து அவளை விபசாரஞ் செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான் என்று கூறியிருக்கிறார். (அவள் குற்றமற்றிருப்பின்), மறுமணத்தின் மூலம் மீறுதலுக்குட்பட பண்ணுகிறான் தன் மனைவி வேசித்தனம் பண்ணினதினிமித்தம் அவள் தள்ளிவிடப்பட்டால், அந்த புருஷன் கர்த்தருக்கு முன்பாக பிழையற்றவன் இந்த பாவத்தினிமித்தம் "தள்ளப்பட்டவளுக்கு" மறுமணம் செய்யாமலே அவள் விபச்சாரியாகிறாள்.

**மரணமேயன்றி விவாக ஐக்கியத்தை ஒன்றும் பிரிக்கலாகாது**

அப்போஸ்தலனாகிய பவுல் மறுமணம் குறித்து தெளிவாக விவரித்துள்ளார். மரணத்தினாலேயன்றி வேறொன்றினாலும் மறுமணம் செய்ய விடுதலையாக்கப்படவில்லை. அதெப்படியென்றால், "புருஷனுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்த பின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள், ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினால் விபச்சாரியெனப்படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் அந்த பிரமாணத்தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபச்சாரியல்ல" (ரோமர் 7 : 2 – 3). ஆகவே உயிரோடிருக்கும் ஒரு புருஷனையோ அல்லது மனைவியையோ உடையவர்கள் மறுமணம் செய்தால் அது விபச்சாரம்.

> வேசித்தன முகாந்தரத்தினாலொழிய, தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விாசாரஞ் செய்யப்பண்ணுகிற வனாயிருப்பான்.
>
> – அகஸ்டின்

**விவாகரத்தாயினும், மறுமணம் செய்யலாகாது**

விவாகரத்து ஆன கணவனோ (அ) மனைவியோ தனிமைப்படுத்துவதால், அவர்கள் விபச்சாரம் எனும் பாவத்திற்குள்ளாக வாய்ப்புண்டு. விவாகம் பண்ணிக் கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது; "மனைவியானவள் புருஷனை விட்டுப் பிரிந்து போகக் கூடாது. பிரிந்து போனால் அவள் விவாகமில்லாதிருக்கடவள் அல்லது புருஷனோடு ஒப்புரவாகக்கடவள். புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது" (1 கொரி 7 : 10 –11). வாழக்கடினமான கொடுமையான சூழ்நிலைகள் நேரிடும்போது, மரித்து தான் வாழமுடியும் எனில் மறுமணம் செய்யாமல் பிரிந்து வாழலாம்.

> விவாகம் என்பது ஒவ்வொருவருடைய வாழ்நாள் முழுவதிற்குமான முடிவு........ ஆகவே ஜெபத்தோடும், கவனமாகவும் விவாகத்தை தேவசித்தப்படி செய்ய வேண்டும்

இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால், பாலமில்லாமல் நாமும் அவரைப் போல் பரிசுத்தமாய் வாழலாம்.

### இரட்சிக்கப்படாத வாழ்க்கைத்துணை

பவுல் இரட்சிக்கப்படாத வாழ்க்கைத்துணையோடு வாழ்வதை குறித்த பல காரியங்களை கூறியிருக்கிறார். விசுவாசமுள்ள ஒரு மனைவி அவிசுவாசியான – புருஷனோடு கூட வாழ்ந்தால் திருமண பந்தத்தால் இணைந்து வாழ்கிறார்கள்– புருஷன் – விபச்சாரத்திலிருந்தால், "தெளிவாக புரிகிறது" அவனுக்கு தன் மனைவியோடு வாழவிருப்பமில்லையென்று சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தால் பிரிந்து

போகட்டும், இப்படிப்பட்ட விஷயத்தில், "சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல. சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்" (1கொரி 7 : 12–15). விசுவாசி கர்த்தருக்கு முன்பாக அந்த பிணைப்பில் இருக்கிறார் (மத் 5 : 31 – 32) பார்க்க, ஆகவே இதன் மூலம் மறுமணம் என்பதற்கு அனுமதி இல்லை.

மறுபடியும் பவுல் இவ்வாறாக கூறுகிறார் "மனைவியாளவள் தன் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள். தன் புருஷன் மரித்த பின்பு தனக்கு இஷ்டமானவனையும் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள்" (1கொரி 7 : 39) .

### அவிசுவாசியை விவாகம் பண்ண வேண்டாம்

முதல் விவாகமோ (அ) இரண்டாவது விவாகமோ(சட்டப்படி) இரட்சிக்கப்பட்டவர்களை "கர்த்தருக்குள் திருமணம் செய்வது நல்லது" ஏனெனில் ஒரு விசுவாசி, அவிசுவாசியை மணப்பதினால் தன் இரட்சிப்பை இழக்க நேரிடும். தேவ பிள்ளையே, விழித்திரு உன் இரட்சிப்பை இழந்து போகாதே.

### விபச்சாரகாரர்களின் நியாயத்தீர்ப்பு

''விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக ; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்'' (எபிரேயர் 13 : 4). மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன.. "இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (கலா 5 : 19 – 21).

விபச்சார பாவத்தில் வாழ்கிறவர்களை மன்னித்து, அவருடைய இரக்கத்தைப் பெறவே இயேசு கிறிஸ்து மரித்தார் (யோவான் 8 : 3–11). இயேசு அவர்களையும் நேசிக்கிறார். அவர்கள் மனந்திரும்பி, அந்த பாவத்திலிருந்து விடுபட வேண்டும் என நினைக்கிறார். பாவக்கறைகளும், ஆக்கினையும், அவர்களுடைய குற்றமும் பரிசுத்த ஆவியானவராலே பாவமற கழுவப்படும்.

புதிய ஏற்பாட்டில் நாம் தெளிவாக புரிந்து கொள்வது யாதெனில் விவாகம் என்பது தகர்க்கப்படமுடியாத பிணைப்பு, கர்த்தரால் இணைக்கப்பட்ட விவாகத்தில் விவாகரத்தும் மறுமணமும் என்னும் திட்டமே இல்லை. விவாகம் என்பது வாழ்நாள் முழுவதுமான ஒரு ஐக்கியம் ஆகவே ஜெபத்தோடும் கவனமாகவும் – செயல்பட வேண்டும். ஒரேயொரு தருணம். ஆகவே அது மதிப்பிற்குரியதாகவும், ஆசீர்வாதமாகவும் கடவுளின் சித்தப்படி நடக்க வேண்டும்.

# பலதாரக் கொள்கை ஏற்புடையதல்ல

பழைய ஏற்பாட்டு நாட்களில், பலர் பல மனைவிகளையும், அநேக மறுமனையாட்டிகளையும் கொண்டவர்களாய் வாழ்ந்து வந்தார்கள் (பலதாரக் கொள்கை) ஆனால் கர்த்தராகிய தேவனுடைய அநாதி தீர்மானமும், சித்தமும் ஒருவன் ஒரே மனைவியை மாத்திரம் உடையவனாய் வாழ வேண்டும்.இதற்காகவே இந்த உடன்படிக்கையை புதியஏற்பாட்டில் நிலைநாட்டினார்.

“ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும், பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்” (மத் 19 : 4-6).

“இருவர்” என்பது மூன்று அல்லது நான்கு அல்ல. இது உண்மையாகவே இருவர் மட்டுமே. கர்த்தராகிய தேவன் ஏவாள் என்கிற ஒரேயொரு பெண்ணை ஆதாமுக்காக உண்டாக்கினார் “மார்தாளை” உருவாக்கவில்லை

பலதாரமணம் என்பது இன்று பல நாடுகளில் உள்ளது. இது கர்த்தருக்கு ஏற்புடையதல்ல.ஆதியிலே அவர் உண்டாக்கின இருவர் மட்டுமே சார்ந்த குடும்பவாழ்வை அவர் மீண்டும் நிலைநாட்டினார்.பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில் “கண்காணியானவன் ஒரே மனைவியை உடைய புருஷனும்” (1 தீமோ 3 : 2). பவுல், ஒரு மனிதன் திருமணம் செய்வதை வற்புறுத்தவில்லை.அதேசமயம் அப்படி செய்தால் பலதாரமணம் என்பதை அவர் ஏற்கவில்லை.ஏனெனில் பல மனைவிகளை உடைய ஒரு புருஷன் ஊழியக்காரனாயிருக்க தகுதியில்லை. ❖

# குழந்தைகளைக் குறித்த நிலை என்ன?

ஒரு புருஷனோ அல்லது மனைவியோ விவாகரத்து வாங்கிவிட்டு வேறொருவரை மறுமணம் செய்து போய்விட்டால் அவள்/அவன் அங்கே விபச்சாரி. இதேபோலதான் பலதாரமணம் செய்பவர்களின் நிலைமையும். அவர்கள் என்றென்றைக்குமாய் காப்பாற்றபடாதபடிக்கு சாத்தான் கொண்டுவரும் உபாயதந்திரமே இந்த பிரிவினை. ஒருவர் இரட்சிக்கப்பட்டிருப்பின், தன் பாவத்தைவிட்டு பரிசுத்தமாய் வாழ்கிறார் என்பதுதான். இதுமாதிரியான விவாகத்தில் பாதிக்கப்படுவது இருதயமே.பரிசுத்தஆவியானவரும், நம் இரட்சகருமே மாத்திரம் நம்மை எல்லா பாவத்தினின்றும் விலக்கி காக்க முடியும்.



இதுமாதிரியான தவறான பெற்றோருக்கு பிறக்கும் பிள்ளைகள் ஒன்றுமறியாதவர்களாய் தேவனுக்கு முன்பாக குற்றமற்றவர்கள். எப்போதுமே ஒரு மனிதன் தன் இருதயத்தை தேவனுக்கும், தன் சிந்தையை வேதசத்தியத்துக்கு ஒப்புக்கொடுத்து வாழும்போது, அவரது விவாகமும் தேவ சித்தபடிதான் நடக்கும்.


அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். “ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்” (1 தீமோ 5 : 8). உணர்வுபூர்வமாகவும், மாம்சீக பிரகாரமான உலகத்திலே தன் பிள்ளைகளை கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு எல்லா தகப்பனுக்கும் உண்டு.தன் கவனிப்பையும், வளர்ப்பையும் பிள்ளைகளுக்கு கொடுக்கத்தவறினால் அது பாவம்.

“ஒருவன் தன் சொந்த ஜனங்களையும்,
விசேஷமாகத் தன் வீட்டாரையும்
விசாரியாமற் போனால்,
அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும்
அவிசுவாசியிலும்
கெட்டவனுமாயிருப்பான்”
(1 தீமோ 5 : 8).

சிலர் இருக்கிறார்கள் தேவஊழியர்களாய்... அவர்களின் மோசமான பிண்ணனி என்னவெனில், தன் இரண்டாவது மனைவியை அடித்து, துன்புறுத்தி, பிள்ளைகளை கவனிக்காமல் அநாதையாக்கப்பட்டவர்களாய், கைவிடப்பட்ட நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற நிலை. “இரண்டாவது விவாகம் என்பதே தவறு எனும்போது, அவர்களை அடித்து துன்புறுத்துவது அதைவிட கொடுமை.இவர்களும் கள்ளர் கூட்டமாய் தேவஊழியன் என்று சொல்லி நடித்து கொண்டிருக்கிறார்கள்.ஒரு தகப்பனாய் தன் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளை இவர் செய்ய தவறிவிட்டார். மேலும் விவாகம் செய்யாமலேயே சட்டத்தை மீறி , இருவர் சேர்ந்து வாழ்கிறார்களெனில் அது பாவம்.அது தேவன் அருவருக்கிற காரியம்.இதுமாதிரியான மோசமான சூழ்நிலைகளைத் தவிர்க்க தேவபிள்ளைகளின் ஆலோசனையை கேட்கலாம். ❖

கேள்விக்கு என்ன பதில்?

வேதத்தை வியாக்கியானம் செய்வதற்கு விசுவாசத்தின் ஒற்றுமையே அடித்தளம்.



**கேள்வி : மத்தேயு 19 : 9 வசனத்தை குறித்த விளக்கம் என்ன?**

**பதில் :** விவாகரத்தும் மறுமணமும் என்கிற ஒரு காரியத்தை மத்தேயு 19 : 9 படி, எவனாகிலும் தன் மனைவி வேசித்தனத்தினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபச்சாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

விசுவாசத்தின் ஒற்றுமை என்பதே இதன் அடித்தளம்.சில வேதவசனங்கள் மற்ற வசனங்களோடு ஒத்துப்போகும்.அதை ஒப்பிட்டுப் பார்த்து புரிந்து கொள்ளலாம்.சில வசனங்கள் ஆதாரங்கள் இல்லாவிடினும், தனித்துவமான பதிலை அது தருகிறதாய் அமையும்.

இந்த வேதபகுதியிலிருந்து தெரிந்துகொள்வது யாதெனில் விவாகம் என்பது முழு வாழ்வு சார்ந்தது. சிலர் சூழ்நிலைகளால் அவர்களை விட்டு பிரிந்துபோன வாழ்க்கைத் துணையைக் குறித்து அவநம்பிக்கையான வாக்குவாதங்களும், விவாதங்களும் தேவனுக்கு முன்பாக நம்மை குற்றவாளியாக்குகிறது. மத்தேயு 5 : 32, லூக் 16 : 18, மாற்கு 10 : 11- 12 ; 1 கொரி 7 : 10 -11, 39 இவையெல்லாவற்றையும் அடிப்படையாக கொண்டே மத்தேயு 19 : 9 ஐ நாம் தெளிவுபடுத்திக்கொள்ளலாம்.

**பின்வரும் விளக்கங்கள் சகோ.ஆஸ்டிஸ் வில்சன் அவர்கள் எழுதியது**

இதில் இரண்டு பகுதிகள் உள்ளன. 3 வது வசனத்தில், பரிசேயர் அவரை சோதிக்க வேண்டுமென்று அவரிடத்தில் வந்து : புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள்.

அவர்களுடைய நியாயப்பிரமாணத்திலே இருக்கிறபடி அவர்கள் நடந்து கொண்டிருக்கின்றதால் விவாகரத்து, தள்ளுதற்சீட்டு, மறுமணம் என்பது அவர்கள் பழக்கத்தில் இருந்ததே. (வசனம் 3) ஆகவே இயேசுவினிடத்தில் இந்த கேள்வியை கேட்கவேண்டிய அவசியமே இல்லை,அதே காலக்கட்டத்தில் அவர்கள் பல மனைவிகளோடே வாழ்ந்து கொண்டிருந்தார்கள் (பலதாரமணம்).

இந்த வசனத்தின் முதல்பகுதியிலே இயேசுகிறிஸ்து தருகிற விளக்கம் என்னவெனில் வேசித்தன முகாந்தரத்தினாலொழிய மனைவியை தள்ளிவிடக்கூடாது. மத்தேயு 5 : 32 லும் இதே காரியம் குறிப்டப்பட்டுள்ளது. இது இருவேறு சத்தியவசனங்களால் சாட்சி பகரப்டுகிறது. (மத்தேயு 18 : 16 ; யோவான் 8 : 17 ). தள்ளிவிடுதல் என்பதே இங்கு சொல்லப்பட்டுள்ளது.

இதன் பின்பு இயேசு புதிய ஏற்பாட்டில் இதைக் குறித்த விளக்கத்தை பின்வருமாறு கூறினார். தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபச்சாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். இதைக் கேட்டு பரிசேயர்கள் அதிர்ச்சியடைந்திருப்பார்கள்.

> பின்பு அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி, மனைவியைப் பற்றி புருஷனுடைய காரியம் இப்படியிருந்தால், விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல மத் 19 : 10 என்றார்கள். விவாகத்தின் பிணைப்பை எளிதாக பிரிக்க முடியாது.ஆகவே விவாகம் செய்யாதிருப்பதே மேல்.
>
> மத்தேயு 19 : 9 ஐ கடைசியாக கூறினால், வேசித்தனம் மாத்திரமே மனைவியை தள்ளி விடுவதற்கான காரணம் என புரிகிறது. ஆகவே மறுமணம் என்பது விபச்சாரமே. மத் 5 : 32 மனைவியை தள்ளி விடுகிறவன் கர்த்தருக்கு முன்பதாக குற்றவாளியாகிறான்.

வேசித்தனம் என்பதன் கிரேக்க வார்த்தை போர்னியா.அதன் பொருள் நடத்தை கெட்டவர்கள். விவாகமானது இருவருக்கிடையே உள்ள உறவைக் குறிப்பது.மேலும் தன் மனைவியல்லாத, பிறரோடு பாவத்தில் ஈடுபடுகிறதையும் இது குறிக்கிறது.

மத்தேயு 5 : 32 ; மத் 19 : 9 வேசித்தனத்தால் தள்ளி விடப்படுகிறவர்களுக்கு மறுமணம் மறுக்கப்படுகிறது.ஏனெனில் குற்றமில்லாத ஒரு பெண்ணுக்கும், விபச்சாரம் செய்கிறவளுக்கும் வித்தியாசம் ஏது?

மறுமணம் ஏற்புடையதாயின் வேறுபாட்டை கண்டிருக்கலாம்.ஆகவே புதிய ஏற்பாட்டு கொள்கைபடி, விவாகம் வாழ்க்கைக்கானது.அது வெறும் மாம்ச வெளிப்பாடல்ல.

### மத்தேயு ஹென்றி என்கிற எழுத்தாளரின் வார்த்தைகள்

> விவாகப் பிணைப்பு என்பது அந்த நபர்களைச் சார்ந்ததல்ல. இயற்கையாகவே விவாகம் என்பது அன்பின் இணைப்பே. மோசேயின் நியாயப்பிரமாணம் ஜனங்களின் இருதயக் கடினத்தினிமித்தம் தளர்த்தப்பட்டு, விவாகரத்தும் மறுமணமும் கொண்டு வரப்பட்டாலும் கூட, கிறிஸ்துவானவர் மேலும் சில ஒழுங்குகளை வகுத்து, வேசித்தனம் என்கிற முகாந்தரம் மாத்திரமே தள்ளுதற்சீட்டை பெற தகுதி என்கிறார்

புதியஏற்பாட்டின் உறுதியான (எம்பேடிக் டயலாக்ட்) மொழிபெயர்ப்பான வாட்டிகன் கையெழுத்துப்பிரதியின் படி : நான் உங்களுக்கு சொல்லுகிறேன். யாராகிலும் தன் மனைவியை வேசித்தனம் இல்லாமல் வேறு காரணத்தினால் தள்ளிவிட்டால், அவன் விபச்சாரம் செய்கிறவன்.மேலும் அவளை மறுமணம் செய்கிறவனும் விபச்சாரியே ( மத் 19 : 9 ). மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களிலும் கூட இதே கருத்துக்களே தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்தேயு எழுதின சுவிசேஷம், குறிப்பாக யூத ஜனங்கள் தங்களுடைய பழக்கவழக்கமான விவாகரத்தையும் மறுமணத்தையும் குறித்து புரிந்துகொள்ள வேண்டியதற்காகவே. யூதர்கள் அறிந்து கொள்ளும் வகையில் இயேசு அவர்களுக்கு விவரித்தார்.அதேசமயம் மாற்கு எழுதின சுவிசேஷம் யூதரல்லாத புறஜாதி ஒரு மனைவியை தள்ளிவிட்டு, வேறொருவரை மறுமணம் (மத் 19 : 9) செய்வது கிறிஸ்துவின் போதனைபடி அது பாவம்.❖

*விவாகப்பிணைப்பு என்பது இருவரது விருப்பம் சார்ந்ததல்ல. இயற்கையாகவே விவாகத்தின் தன்மையே அன்பின் பிணைப்பு*
- மத்தேயு ஹென்றி

**உங்களுக்குத் தெரியுமா?**

*பழைய ஏற்பாட்டு காலத்தில், யூதர்களை விவாகம் செய்வதற்கு போதுமான நீண்ட கால அவகாசம் இருவருக்கும் கொடுக்கப்படும். இது மாதிரியான நிச்சயதார்த்தம் இப்போது காணப்படுகிற மேற்கத்திய நிச்சயதார்த்த முறைகளைக் காட்டிலும் அதிக பிணைப்புள்ளது. இந்த காலகட்டத்தில், யாராவது ஒருவர் வேசித்தனத்தில் கண்டுபிடிக்கப்பட்டால், விவாகபந்தம் விவாகரத்தாக மாற்றப்பட்டுவிடும். யூதமதசட்டப்படி நிச்சயம் என்பதே விவாகத்திற்கான உறுதிவாக்கு.*

*இவ்வாறு விவாகத்தில் இணைக்கப்படவிருக்கிற இருவரும் நிச்சயம் செய்யப்பட்டு பின்பு சேர்ந்து வாழவில்லையெனினும் புருஷன் மனைவியாகத்தான் எண்ணப்படுவார்கள். உதாரணம் யோசேப்பு, மரியாள் மத் 1:18–19.*

*ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை*

## அக்கினியை ஏற்று

பலிபீடத்தின் மேல் அக்கினி எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்க வேண்டும்; அது ஒரு பொழுதும் அவிந்து போகலாகாது – லேவி 6:13

பலிபீடத்தின் மேல் பலியிடப்படும்போது அது எப்போதும் அக்கினியால் எரிந்து கொண்டேயிருக்க வேண்டும். அது அணைய கூடாது. கவனமாக பார்த்து அக்கினியை ஏற்ற வேண்டும். கட்டைகளை எரியும்படி போட்டுக்கொண்டே இருக்க வேண்டும்.

அது போலதான் விவாகமும். அன்பு எனும் தீ ஒருபோதும் அணைந்து போக இயேசு கிறிஸ்து விரும்பமாட்டார். விவாகத்தின் பிணைப்பு பாதுகாக்கப்பட வேண்டுமெனில் அது எப்போதும் அன்பின் கயிறுகளால் கட்டப்பட வேண்டும்.பல விவாகங்களில் மனம் சலித்துப் போக காரணம் தம்பதியினர் அன்பு மற்றும் தியாகத்தினால் உறவை வளர்த்துக்கொள்ள நேரம் ஒதுக்குவதில்லை.

வேலைப்பளுவின் காரணமாக தங்கள் வாழ்வை கவனிக்கத் தவறுகிறார்கள். தேவ ஊழியர்கள் கர்த்தரின் பணியில் ஆழ்ந்து இருப்பதால் தங்கள் வாழ்வை அன்பினால் வழிநடத்தி செல்வதும் எளிது. சிலசமயங்களில் சத்துருவானவன் ஊடுருவி குடும்ப வாழ்வை சீரழிக்க எண்ணும் போது தேவபிள்ளைகளின் முன் அவன் தோற்றுப்போவான்.தன் திருமண வாழ்வை சரியாக கட்டிக் காத்துக்கொண்டு உறுதியாய் வாழ்கிற தேவ ஊழியர்களின்



ஆத்தும ஆதாயப்பணியும் மிகவும் பெலனுள்ளதாய் இருக்கும். ஊழியப் பாதையின் வளர்ச்சி மாத்திரமல்ல, தேவனுடைய பணிகளில் முழுக்குடும்பமாய் ஆர்வத்தோடு வழிவகுக்கும்.

குடும்பத்திற்கென்று மாலை நேரத்தை செலவிடுங்கள். எல்லோரும் சேர்ந்து நடைபயணம் செய்யலாம்.இரவு உணவு சாப்பிட வெளியே செல்லலாம்.விளையாடலாம், தொழில் ரீதியான காரியங்களல்லாத மற்றவைகளை குறித்து பேசலாம். ஆலயத்தை குறித்து பேசலாம். ஆகவே அனைவருடனுமான இணைப்பு இன்னும் வலிமையாகும்.

**அக்கினியை ஏற்றுங்கள்!❖**


**தொடர்புக்கு:-**

ஆசிரியர்,
காஸ்பல் ட்ருத்
தேவசபை வெளியீடு
2/227 – கோலார்பட்டி
பொள்ளாச்சி வட்டம்
தென் இந்தியா - 642 107

The Editor,
Gospel Truth,
Church of God Publication
2/227 - Kolarpatti
Pollachi Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org


**கர்த்தருக்கு பரிசுத்தம்**

# உள்ளத்தின் ஆழத்திலிருந்து...



இணைப்பு பதிப்பு – காஸ்பல் ட்ரூத், இதழ்–14
*விவாகரத்தும் மறுமணமும்*

விசுவாச துரோகமும் விவாகரத்தும் பேரழிவுக்கான சக்திகள். ஒரு குடும்பத்திலே கணவன் (அ) மனைவி (அ) தகப்பன் (அ) தாய் இவர்களில் யாராவது ஒருவரால் கைவிடப்பட்ட நிலையில் வாழும் பிள்ளைகளின் நிலையை அந்த வேதனைகளை விவரிக்கவே முடியாது. இவ்வாறு கைவிடப்பட்ட வாழ்க்கைத் துணையோ (அ) குழந்தைகளோ துரோகத்தின் வேதனையை வெளிக்காட்டுகிறவர்களாய் சுயமரியாதையற்று, நம்பிக்கையற்ற, ஆதரவில்லாமல், அன்பற்றவர்களாய் இருப்பார்கள். குற்றமனப்பான்மையும், அவமானமும் தவறிழைத்த வாழ்க்கைத் துணையையே சாரும்.

விவாகரத்து எனும் முடிவை எடுப்பதற்கு முன் பாதிக்கப்பட்டவர்களின் தாங்கொணா துயரத்தையும், கொந்தளிப்பையும் எண்ணிப் பார்ப்பதும் அவசியம். ஒரு அன்பான குடும்பத்திற்காக ஏங்கி அழுது தலையணையை கண்ணீரால் நனைத்து காத்திருக்கும் எத்தனை தனிமைப்படுத்தப்பட்ட கணவன்கள், மனைவி மற்றும் குழந்தைகள். இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட கணவன், மனைவி, பிள்ளைகளின் எதிர்காலம் நம்பிக்கையற்றும், இருண்டுமே காணப்படும். பணத்திற்கு இன்று உலகில் பல குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டு மனைவி, பிள்ளைகள் (அ) கணவன், பிள்ளைகள் என்றே வாழ்ந்து வருகிறார்கள்.

நீங்களும் இவர்களைப் போல நொறுங்கிப்போன ஒரு குடும்பத்தில் வாழ்ந்து கொண்டிருப்பீர்களானால் உங்களை நேசிக்க, அன்புகாட்ட, துயரங்களில் உங்களோடு நடந்துவர ஒரு அநாதி அன்புள்ள இயேசு கிறிஸ்து ஒரு நண்பராய், தோழியாய் உங்கள் அருகே இருக்கிறார். விவாகரத்தும் மறுமணமுமே ஒரு குடும்பத்தின் ஒற்றுமையை சிதைப்பதல்ல, மாறாக குடும்ப சூழல் ஐக்கியங்கள், மற்ற உறவு முறைகள் இவையாவுமே இதுமாதிரியான சமயங்களில், உண்மையான வேதசத்தியத்தை மனதில் கொண்டு, ஒவ்வொருவரையும் நேசித்து, குடும்பத்தார் மற்றும் உறவின்களின் குற்றத்தை மன்னித்து மறந்து உறவுகளை மகிழ்ச்சியோடு ஆதரிப்போம்.

**“ சிதறடிக்கப்பட்ட குடும்ப வாழ்வில் இருக்கிறீர்களா நீங்கள் விலையேறப்பெற்ற அன்புக்கு பாத்திரவான்கள் என்று அறிந்து கொள்ளுங்கள் ”**

இன்று பல கலப்பு திருமணங்கள் நடைபெறுகின்றன அதிலே ஒருவர் இரட்சிக்கப்பட்டு, இயேசுவை ஏற்றுக் கொண்டு திருமண வாழ்வை புரிந்து கொண்டால், அது குழப்பத்தையே உண்டாக்குகிறது. அப்படியாயின் தேவசித்தம் (அ) திட்டம் என்ன? இரட்சிக்கப்பட்டவர்களாய், அறியாமை இருளிலே பல வருடங்களாக விபச்சாரியாய் வாழ்ந்த ஒருவருக்கு எந்தவொரு ஊழியராலும் இரக்கத்தை தர முடியாது. இதுமாதிரியான கடினமான வழக்குகளில் தேவ ஞானத்தோடு செயல்படுவது அவசியம்.

**Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide**
**Indian Constitution Act 25th & 19(1) Section**
**TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY**

ஏனெனில் நான் இதுமாதிரியான ஒரு தம்பதியினரை சந்தித்திருக்கிறேன். மனைவி அவரது கணவனை விட்டுவிட்டு பாவ வாழ்க்கைக்குள் சென்று விட்டாள். இந்த மனிதரோ இன்னொருவரை மறுமணம் செய்து கொண்டு அநேக குழந்தைகளுக்கு தகப்பனாகிவிட்டார். பின்பு சில காலம் சென்று அவர்கள் இரட்சிக்கப்பட்டு விட்டார்கள். கண்களில் கண்ணீரோடு நாங்கள் என்ன செய்வது? என்று என்னிடம் கேட்டார்கள். நான் விவாகத்தைக் குறித்து கர்த்தர் கட்டளையிட்டிருக்கிற யாவற்றையும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை ஊக்கப்படுத்தி, கர்த்தருடைய வழிகாட்டுதலை கேட்கும்படி செய்தேன். அவர்களை ஆலயத்திற்கு வரும்படி, ஆராதனையில் கலந்து கொள்ளும்படி செய்தோம். மேலும் இன்னொருவர் ஒன்றிரண்டு மாதங்களாக என்னை தொந்தரவு செய்து கொண்டிருந்தார். சில காரணங்களால், சூழ்நிலைகளால் விவாகரத்து செய்ய முடிவு செய்து அதற்கான அனுமதியை என்னிடம் கேட்டார். நான் தெளிவாக கூறிவிட்டேன் என்னுடைய ஒப்புதல் தேவையற்றது நீங்கள் கர்த்தரிடத்தில் கேளுங்கள் நான் எந்தவொரு மனிதனுக்கும் நியாயாதிபதி அல்ல. தேவ வார்த்தையும், தேவனுமே நம் ஒவ்வொருவருடைய நியாயாதிபதி.

பல நல்ல மனிதர்களின் வாழ்வு , வேதத்தின் உணர்வற்று தங்கள் வாலிப நாட்களின் பாவங்களினால் சீரழிந்து போனதை எனக்கு தெரியும். நான் அவர்களுக்காக அழுதிருக்கிறேன் எனக்கு எல்லாவற்றிற்கும் பதில் தெரியாது . ஆனால் அன்பின் தேவன் அவரை தெரியும், அவருடைய வேத சத்தியத்தையும் அறிவேன். அவருடைய நம்பிக்கையின் பாத்திரவான்களாய் நாம் வாழ தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம்.

இதயம் நொருங்குண்டு, இயசேுவின் அன்பைத் தேடும் இதுமாதிரியான மோசமான சூழ்நிலையில் வாழும் மக்களுக்கு தேவ சத்தியத்தையும், அவருடைய பரிசுத்தத்தை குறித்து போதிக்க வேண்டியது தேவசபையின் கடமை, தேவனுடைய வசனம் சொல்லுகிறபடி, மறுமணத்தின் மூலம் விபச்சார வாழ்க்கை என வாழும் மக்களுக்கும் தேவனுடைய அன்பை போதித்து, அவர்கள் கிறிஸ்துவின் இரக்கத்தையும், பெலத்தையும் பெற்று ஒளியில் நடக்க வழிகாட்டுவோம்.

**" கர்த்தருடைய அன்பை நான் அறிந்திருக்கிறேன் அவருடைய வார்த்தையை**



**அறிந்திருக்கிறேன் அவரை விசுவாசிக்கிற யாவருக்கும் ஒத்தாசை அனுப்ப தேவன் வல்லவராயிருக்கிறார் "**

**Tamil Editor** : **W.S.Vedha, Church of God, 2/227 Kolarpatti, Pollachi Taluk, South India - 642 107.**
**Phone : 04259 - 280488 Cell: 95975 62641**
**Publisher** : **V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan**
**Printer** : **Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316**